[1987 ஏப்ரல் 4

ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் அரசு மேல் நிலைப் பள்ளியில் பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சிப் பிரிவு துவங்குதல்.

294—(*வினா எண் 11307) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்பு மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள உடையார்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சிப் பிரிவு துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பள்ளியில் "இடைநிலை ஆசிரியர் பயிற்சி" என்ற தொழிற் பாடத்தை, 1986-87-ல் தொடங்க, அனுமதிக்கப் பட்டுள்ளது.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர் பயிற்சித் தொழில் பாடத்தில் ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு மொத்தமாக 250 மார்க்குகள் என்றும், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் 50 மார்க்குகள் வாங்க வேண்டும் என்றும் இருப்பதிலிருந்து அவர்களுக்குச் சலுகை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அதை அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவி புரியும் தனியார் பள்ளிகளிலும், அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் என்ற பெயராலே நன்கொடை வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா? அதுகுறித்து கோரிக்கை மனு ஏதாவது வந்திருக்கிறதா? வந்திருந்தால் அரசு எடுத்த நடவடிக்கை என்ன? இனிமேல் வந்தால் அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் மூலமாக பள்ளிகளுக்கு வேண்டிய இன்பிராஸ்ட்ரக்ச்சர் என்று சொல்லக்

1987 ஏப்ரல் 4]

கூடிய அடிப்படை வசதிகளை செய்து கொள்ள நன்கொடை வசூலிப்பது ஒன்றும் குற்றம் இல்லை. உண்மையிலேயே அது உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்த வேண்டிய ஒன்று. சீரமைப்பு மாநாடு என்ற அமைப்பின்கீழ் கிட்டத்தட்ட எல்லாப் பள்ளி களிலும் இப்படி அமைக்கப்பட்டு பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் பள்ளிக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைப் பெறவும், தளவாட சாமான்கள் வாங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அரசு அதற்கு ஊக்கம் அளிக்கிறது. தமிழகத்தில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக மைய அரசினுடைய மனித வள மேம்பாட்டுத் துறையினுடைய விருப்பத்திற்கு ஏற்ப அது நடைபெற்று வருகிறது.

1985-ல் லாட்டரி மூலம் அரசுக்குக் கிடைத்த வரி.

295—(* வினா எண் 9847) திரு. கே. உச்சி: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1985-ம் ஆண்டில் லாட்டரி டிக்கெட் மூலம் அரசுக்குக் கிடைத்த வரித்தொகை எவ்வளவு ?

(ஆ) அது எந்த வகையில் செலவிடப்படுகிறது ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) 1985-ம் ஆண்டில் (ஜனவரி 1985 முதல் டிசம்பர் 1985 வரை) லாட்டரி டிக்கெட் மூலம் அரசுக்குக் கிடைத்த வரித் தொகை 1,40,63,623 ரூபாய் ஆகும்.

(ஆ) அது, அரசின் பொது வருவாய்க் கணக்கில் சேர்க்கப் பட்டு செலவிடப்படுகிறது.

திரு. ஆ. சிவக்குமார்: தலைவர் அவர்களே, இந்த வரியை ஏமாற்றுகிற வகையில் கேரள மாநிலத்தின் எல்லையில் சில நிறுவனங்களை அமைத்துக்கொண்டு லாட்டரி சீட்டு விற்பனை